[illegible]

ஶ்ரீமீமாம்ஸா [illegible]

[illegible]

[illegible]

[illegible]

ளால் சொல்லப்பட்டுள்ளன. ஜோதிடம் இவ் விஷயத்தைப் பலவிதங்காட்டி சாட்சியிடுகின்றது. யோகிகளினரசனுன ஸ்ரீ பதஞ்சலி மாமுனிவரும் தாம்யெழுதிய வைத்தியசாஸ்திரத்தில் "முற்பவத்திற் பவன் முதிர்ந்தால் பிணியாம்,, ஔஷதமருந்தல், சொடுத்தல், செபித்தல் முதலியவற்ருல் ஒழியும்,, என்றுஎழுதினுர். இவ்விஷயத்தை யோகிகளும் ஒப்பினுர்கள். இனி வேத பாக்யர்களான பௌத்தர்களும் மறுபிறப்புண்டெனுேப்பினுர்ாள். அவர்கள் "காதிகன்மம், அகாதிகன்மம்,, என்று இருவகைக்கன்மங்களைப் பிரித்து அக்கன்மங்களைகொண்டு மறுபிறப்பைத்தாபிக்கின்றுர்கள். ஆதலால் சுருதி, யுக்தி அநுபவங்களுக்குப் பொருத்தமுள்ளது மறுபிறப்பென்றுதுணிதல் கடமை. இனி இவ்விடபங்களை பொப்பாமலும், இதற்கு ஆதாரமாயாசெழுதிய யுக்திகளைக் கண்டிக்காமலும், தம் கோஷ்டிகளில ஏதேனுஞ்சொல்லி களிகூறும் ஆண் சிங்கங்களைப் பற்றிச் சிறிதுங்கவனிக்கவேண்டியது அவசியமில்லை. இனி யாமெழுதியதெல்லாம் அவரை நோக்கியல்ல; ஒருசமயம் அவர் மாயவலையில் எம்மவர் சிக்காது உண்மையறிந்துய்வார்களென்றெண்ணியே வரைந்தோம். ஒவ்வொரு சித்தாந்தங்களையும் பிறர் ஆக்ஷேபித்துத் தக்கவிடைகளால் நிலைநாட்டப்பட்டால் அந்த அச்சித்தாந்தங்களின் பெருமையென்றறிக. அஃது மேதாவிகளுக்கழகென்பதெமது கருத்து.

சுபம்.

ஸம்ஸ்கிருதபாஷை

வியாகரணம்

(முன் தொடர்பு)

இப் பாணினி மாமுனிவர் காந்தார தேசத்திற்பிறந்தவரென்று துணியப்படுகின்றது. இவர் தாமெழுதிய வியாகரண சாத்திரத்தில் கீழ்திசையார் வழங்கும் சொற்களுக்கும், வடதிசையார் வழங்கும் சொற்களுக்கும் இலக்கணங்கூறினுரேயன்றி, தென்னுட்டார் மேனுட்டார் இவர் வழங்கும் சொற்களுக்கு எட்டுணையேனுமுரைத்தாரில்லை. இனி பாதேசத்தை இவர் கீழ்திசையென்று வழங்குவதால் இவர் மேற்றிசையிலுள்ளவரென்பது வெளிபாயிற்று. மேற்றிசைச் சொற்களென்றெடுத்து ஒன்றுக்குமிலக்கணம்பகர்ந்தாரில்லையாதலால், இவரிருந்தவிடத்திற்கு மேற்கில் வடமொழி வழக்கு இல்லை என்பது புலப்படுகின்றது. ஆதலால் வடமொழி வழக்கு நிறைந்த தேசங்கள் முற்றிலுமேல் பாகத்திலுள்ளதும், பாதகண்டத்தின் மேற்புறத்திலமைந்ததும் காந்தாரமாகவே இருக்கலாம். இவ்விதமே சில சரித்திராசிரியரும் கொண்டார்கள். இக்காலத்திலே அத்தேசத்தில் மகமதியரன்றி மற்ற எவ்வருணத்தவரும் அங்கு வசிக்கின்றுர்களில்லை. ஆயினும், இத்தேசத்தில் பாரதகதை நடந்த காலத்தில் சூதாடிகளுள் பெரும்புகழ் பெற்றவனும், சுயோதனன் அம்மானுமாகிய சகுனி, காந்தார நாட்டினரசனென்று தெற்றெனப்புலப்படுகின்றது. ஆகையால் துவாபரயுகமுடிவு வரைக்கும் அத்தேசத்தில் மகமதியர்கள் குடியேருமல் நம்முவர் வசமே

ஓம்.

[illegible]

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை

பிரசுரஞ் செய்யப்படும்.

புத்-5.] சிதம்பரம்: 1890ளூ அக்டோபர்மீ 15வ [இ-1.

ப்ரம்மவித்தியா

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியாபிவிர்த்தி.

ஐயா! பத்திரிகாநண்பர்காள்!

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகை என்னும் நங்கை தனித்து நான்கு வருஷங்களாய் நடந்தாள் என்பதை நீவிர் அறிந்திலீரா? இவ்விடம் இவளைப் பின்பற்றுப் [illegible] பினும் அவர் கரு[illegible] தொழிந்தது. ஐ[illegible]

[illegible]

ராயுங்கள்! பற்பல புலவர் தமதெ
ன்க்கொண்டாடிவந்த "லோகான
ந்தன்" என்னும் பத்திரிகாராஜன்
சிறிதுகாலம் இம்மையில் மற்றவர்க்
கானந்தமளித்தும் விரைவில் மறு
மையிற்றானே பேரானந்தம பயக்க
முயன்றான். இம்மட்டோ! தொ
டக்கத்திற்றானே கூதிர் பருவத்துக்
கார்கூட்டம்போன்று பேரிடி முழ
க்கப் பெருங்கோலங்கொண்டு வெ
குதுணைகளுடன் எழுந்துலாவிவந்த
"கீர்வாணவாணீவிலாசன்" என்ப
வனும், விலைமாதர் காதலபோல்
பொருட்குறைவாற் சதையின்பொ
ருளாயினன். அங்ஙனமே மலையா
ளநாட்டின் மணிபோன்ற ஸ்ரீவிஞ்
ஞானசிந்தாமணி மட்டில் வெகு
காலம் உலகத்துள்ள உயர்குலத்
தார் கையில் விளையாடிச் சிறிது
சோர்வுற்றுச் சிறிதுகாலம் மயங்கி
த் தூங்கி ஏதோ மறுபடி கண்வி
ழிக்கப்போவதாகக் கேழ்வி. இங்ங
னமிருக்க, நமது பெண்மணி சிறி
துகாலம் தம் தோழர்கள் தோழி
களுடனும் மற்று வெகுகாலம் தனி
த்துத் தங்கள் பேராதரவால் இத்
தென்னாட்டிலுள்ளவர்கள் ஒருபன
மகிழ்ச்சிதருங்கருவியாய் நின்றாள்.
ஆரியமணிகாள்! இக்காலத்தில்
இவ்விதப் பத்திரிகைகள் வெளிவந்

[illegible]

யெனின், இவ்விதப் பத்திரிகைக
ளைப் படித்தலால இக்காலத்தவர்
அடையும் பயன் யாதுமில்லை. பா
ருங்கள்! இவளைப் பெரும்பான்மை
யிற் படித்துய்பவர்க்கு விசேஷமா
ய் மேற்றிசையார் கொள்கை யவ
லமாய்த்தான் முடிகின்றது. புதி
யதேதும் இவளுக்கு மனதிற்கமை
வதில்லை, மற்றுப் பழையனவே
எல்லாம் முன்னுக்கு வரவேண்டி
அதற்குள்ள பெருமைகளை ஏதுக்
களால எடுத்துக்காட்டிப் போதித்
தலே இவள் முயற்சி. ஐய! என்
சொல்வோம்! இவள் ஏதேனும்
நமது தேசத்துக் கைம்பெண்கள்
தலையின் மயிரைக் காத்து அதை
ச்சேர்த்து அதனால் இந்தியா தேச
த்துக்குற்ற பெரும் நிதியைச் சேர்
ப்பளோ? அல்லது அவர்கள் கரு
தியபோதெல்லாம் ஒவ்வோர் கண
வனைச் சேர்த்து வைப்பாளோ?
மற்று, ஏதேனும்மணமகளை உடன்
மணந்து சுகம்பெற வழிதேடுவா
ளோ? வேறு கடல்யாத்திரைசெ
ய்வது அந்தணர்க்குசிதம் என்பா
ளோ? பிறகு நந்தேசத்தவர் கொ
ண்ட வருண தர்மங்களைப் பொய்
யென்றுரைக்கமுன்வருவாளா? நல்
லதென நாத்திகத்தைக் கொள்வா
ளா? கிறிஸ்தவர் நாற்றத்தையே

[illegible]

கவர்ந்து சுகிப்பாளா? விக்கிரகங்களையேனும் நிந்தனை செய்வாளா? ஆரியசித்தாந்தம் அழகியதல்லவென்றுரைப்பாளா? மற்றதேனும் முன்னோர் கொண்டாடியதை ஒழிப்பாளா? மற்று எக்காரணத்தினாலாவது இத்தேசத்தைவிட்டுப் பிம்பாராதன மார்க்கத்தை ஒழிக்க முயன்று வருவாளா? மேலும் மேற்றிசைக்குருமார் பள்ளிகளில் நமது அரும்புதல்விகளைச்சேர்த்துப்படிப்பிக்க முயன்றுழல்வாளா? வேதங்கள் புதியனவென்று புகல்வாளா? அரிய வறநூல்கள் காலத்துக்கேற்ப மாற்றக்கூடியன என்பாளா? புராணங்களைப் பொய்யெனச் சாற்றுவாளா? மந்திரங்களைப் பயனற்றவையெனக் கூறிக் குறைசொல்வாளா? இதிகாசங்களைத்தான் நம்பலாகாதென்பாளா? இனி மும்மூர்த்திகள் பெருமையையாவதொழிக்க முன்வருவாளா? மற்றென்செய்வாளெனின், முன்னோர் வழியை நலமெனவும், வேதங்களே எமக்குக் குலதனமெனவும், விக்கிரகங்களிற் கடவுளை வணங்கவேண்டுமென்றும், ஆகமங்கள் அரிய பிரமாணங்கள் எனவும், ஆரணங்கள் அனாதிகளெனவும், வருணங்கள் வைதிகங்கள் எனவும், கடவுள் ஒருவர் உண்டென்றும், நமது

[illegible]

சரீரமே ஆன்மாவாகாதென்றும் பிறப்பிறப்பு மக்கட்கின்றியமையாது என்றும், உண்டானதெல்லாம் அனித்தியவஸ்துவென்றும், உலகத்துட்சாரம் நல்லறிவே என்றும், மதங்களுள் மேலானது ஆரியமதமே என்றும், ஆன்மாவே அறியற்பாலதான பொருள் என்றும்; பெண்களுக்குக் கணவனே கடவுளென்றும், நம் புராணத்தை நம்பினால் நன்மை கிடைக்கும் என்றும், இதிகாசங்கள் இகபர சுகங்களை அளிக்கும் என்றும், இப்பூமண்டலத்தில் இவ்வரிய ஆரியதேசத்தினும் மேலானது ஒன்றுமில்லையென்றும், பாஷைகளிற் சிறந்தது வடமொழியே என்றும், ஆரியர் ஆசாரமே சீர்திருந்தியதென்றும், பற்பல நன்மொழிகளால் அன்பர் உள்ளங்குளிர்ந்துருகச் செய்துகொண்டு வருகிறாள். ஆயினும் இவள் நடுநாட்களில் சிறிது தூக்கத்திலிருந்து இப்பொழுது விழித்தாள். ஆதல்கொண்டே இவளை இடையில் நீவிர் காணாதிருந்தீர்கள். கவிவாணர் கூறுவதையொத்துப் பெண்பாலர் இடையிற்குறுகிநிற்றலும் அழகேயாயின் அது ஓர் குற்றமாகாது. நிற்க. பிறகு குற்றங்களை அகற்றி இதுவரையில் உலாவிவந்த

[illegible]

துபோலில்லாது இனி ஓர் உடையன்றி யழகிய மேனியில்லாது வெளிவராள். பின்னர் ஓர் அழகிய சிற்றுடை போர்த்து நன்னடையுடன் தனது திருமேனியைச் சுருக்கி வெகு அழகுடன் நடந்துவருவாள். இந்நங்கைக்கு வயது நான்கு நிறைந்தது. இனி ஐந்தாம் வருஷம் தொடங்குமாதலின் இவள் புதியதாய் எழுத்துகளை அறிந்தெடுத்துத் தனது திருமேனியிற்றொடுத்திடுவாள். இனி இவள் தமது கையைப்பற்றி எக்காலத்தும் குன்றாத பேரானந்தத்துடன் வெளியிற் சஞ்சரிக்கவேண்டித் தங்களையும் பரமேசுரனையும் வேண்டுகிறோம்.

நண்பர்காள்! இப் ப்ரம்மவித்தை தோன்றியகாலம் முதற்கொண்டு இச்சிற்றம்பலத்தில் திருநடனம்புரியும் தில்லை நடராஜமூர்த்திக்கு வேண்டியபடி நல்லோர் உள்ளங்குளிருமாறு மகோற்சவங்கள் நடந்துவருகின்றன. கூடியசீக்கிரத்தில் இவ்விடம் பொன்னம்பலமும் உண்மையில் பொன்னம்பலமாகவே முடிவுபெறும். மேலும் வரும் கரவருஷம் சு-தேதி கும்பாபிஷேக மகோற்சவமும் நடக்கப்போகிறது. அம் மகோற்சவத்தை வெளியிடும் பா

[illegible]

க்கியம் முதலில் தனக்குக்கிடைத்ததைப்பற்றி இப்பத்திரிகைகொண்ட கர்வம் அளவற்றது. வரும் தைமாசம் முதல் சித்திரைமாதம் வரையில் இங்கு நடக்கும் ஒவ்வொரு விசேஷங்களையும் அவ்வக்காலத்தில் வெளியிட்டு வருவாள். ஆயின் உங்களுக்கு அப்பரமபதியான பரமேசுரனிடம் பேரன்பை வளர்ப்பாள். உங்களை இங்கு அக்காலத்தில் வரவழைப்பாள். அக்காலத்தில் தன்னையும் பெருக்குவாள். இதுவரையிற்றானே அனேகர் இப்பத்திரிகையைப் படித்து நல்லுபந்நியாசம் செயய வெளிவந்தார். பெரும்பான்மையில் நாத்திகர் கெடுதி வெளியாயிற்று. கிறிஸ்தவர் சிலவிடம் இதைக்கண்டு ஏட்டம்பிடித்தார்கள். விக்கிரகத் துவேஷிகள் வெளிவந்தொழிந்தார். மூதறிஞர் கொண்டாடி இவளை முதுமொழிகளாற்றுதித்தார்கள். மற்றைய பத்திரிகைகளும் இங்கிருந்து பல விஷயங்களைக் கண்டெடுத்துக்கூறி நிற்கின்றன.

தேசாபிமானம், மதாபிமானம், சுவபாஷாபிமானம், சுவசாதியபிமானம் இவை நிரம்பிய பெரியோர் இப்பத்திரிகையைப் புகழாதொழியார்.

ஶதா ஜ்ராஹ்மண்யமிதி. சுவார
து''ப்ரஹ்மஜா நநு ப்ராஹ்
மணோ ஹவதி'' இதிவ ஶ்ருயதே
தயாஹிஷேயாஶ்வப்ராஹ்மணோ
நஸ்ஹாரம் விவேசஃ இத்யாத்ய
வியபஶ்ச்ஃவஸனே ப்ராஹ்மணமே
வ நயீத'' இத்யாத்யாஃ தயா ''த
மேகம் வேதா நுவசனேநப்ரா
ஹ்மணா விவிதிஷந்தியஜ்ஞநதா
னேந தபஸாநாஶகேந''இ
த்யாத்யாகுயஸதி ஸம்ஶயேபதி
ந நவாநு ப்ராஹ்மணஸ்ய
ஜாஃ தஸ்மின் கஜாதிநஃ க்ரு
தோ வநயநஸ்ய ஸம்ஸ்காரவா
நாதி நஷ்டதோஷாய ஸ்யாஃ. க
யப்ராஹ்மணஸ்ய வஸனே உவ
நய நமித்யவிநஸம்மதம் தயா
ஸத்வஷந்ஸ்ய ப்ராஹ்மண்யாஸ
ஹ்வாஃ தஸ்யோவநயந மேஸம்
மதமேஸ்யாஃ. தஸ்ய வேதவாக்ய
மேக்யஜ்ஞாநஸாய நகய நம் வ்ய
யஷம் ஸ்யாஃ ஸ்வதவனவதஸ்யஜ்ஞா
நவக்வாஃ வனயம் வைஹவாக்ய
வரிஶீயதே ப்ராவாம்வாஹிமித
கிதஞயா வ்ருதிஹாதி வனகேந
ஜ்ராஹ்மணஜாதீயேபநோநஷே
ண வாணிஶ்ருஹணாதிநா ஸம்

இதில் விசேஷமாய் நம்முன்னோர் கொள்கையின் கருத்து வெளியாகின்றது. ஆயின் இவள் இவ்வருஷத்தையும் இடையூறின்றிக் கடந்து எல்லோரும் களிக்கக்தனத்தையும் பெறுவாளென்று முழுமுதற்றிருவருளை எதிர்பார்க்கிறோம். ஆசிரியர்பதஞ்சலியார் கூறியவாறு ஒவ்வொரு நூலுக்கும் தொடக்கத்தும்நடுவிலும் ஆசிகூறுதல் வேண்டுமாதலின் யாம் இப்பத்திரிகைக்கு வருடந்தோறும் ஆசிகூறிவருகிறோம்.

சுபம். சுபம்.

வைதிகவர்ண நிர்ணயம்.

தொடர்ப்பு.

ஐயா! முன் பத்திரிகையில் அது மூவகைப்படுமென்றுரைத்தோமல்லவா? அவ்விஷயம் இப்பொழுது எடுத்துரைப்பாம். "அஃது பிறப்பானும் கன்மத்தானும் தவத்தானும் மூவகைப்படும். "அதனுற்முன் எமக்குஆரியர்எனப்பெயர்" என்பதுஅங்குள்ளவிஷயம். அதை விசாரித்தலைப்பற்றியே இவ்விஷயத்தை விளக்கி விடுவாம். இக்காலத்துள்ள அனேகர் பிரமஞானம் பெற்றவனே பிராமணன் என்கிறார்கள். அதுமட்டிலல்ல, அதுஅமைவதற்கு மற்று வேறு காரணங்க

ஸ்க்ரதாயாம் க்ருஹிதமஹஷ்டாயாம்
வியிவஃ ஸீமேஸம்ஸ்க்ரதாயாம்
ஜாதோ நாமஜாத்யா ப்ராஹ்
மணஃ. தஸ்யச வைதிகாஸ்ஸவேஷ்
வி நிஷேயாஃ ஸகிம நஸவஷ்
யா ஸம்ஸ்காரவிவேசஃ. நவமோ
ஸம்ஹக்ஷயேசஃ, நாவ்யநத்ருஷ்டி
ஜம் வேதேசுவீஷ்தநாவ்யஸள
கயிக்ரியதே வைதிகாநா மஹ்நி
ஹோத்ராதீநாம் யத்ருகமஷ்ணிக
மஷ்ணாப்ராஹ்மண்யம் நியாமகம்
தத்ச உவநயநரூவம் தஸி வி
த்ராதிஹிஃ வேதிககமஷ்கயாவா
யிகாராய ஸம்வாத்யதேதந
வேசஸம்ஸ்காரேண ஸம்ஸ்க்ரதஃ
ஸகிம ப்ராஹ்மணஃஜீவநமஷ்டாணி
கவஷ்ந யயோஹிதாநி ஸவஷ்
யாதாநம் வேஜ்ஜாஸஸதேஷ்
ஷ்டமேஸள வெதிகேரவ
வசனேநஜ்ஜ்ஞாஸேததி. த
யா ஜாநீ ப்ராஹ்மணஃஸரம்யா
மஹஜதீத்யாதௌ தயா ப்ராஹ்
மணோவா ஸவஷ்ட தேவதாஃ இ
த்யாதௌச ஜ்ஞாநவாநேவப்ரா
ஹ்மணஃ வனவ ஜஹிஷ் த்ரியம்
ப்ராஹ்மண்யம் வனவம் ஶ்ரீஹாமஷ்

ளும் உண்டென்றே யாம் எண்ணுகிறோம். மனுமுதலியோர் சிலவிடத்துப் பிராமணத்தியிடம் பிறந்தவனே பிராமணன் என்கிறார்கள். இங்ஙனமிருக்க மற்றவர் "நாற்பது சம்ஸ்காரங்களால் மட்டில் பிராமணனுவான்" என்கிறார்கள். மற்றோரிடத்துப் "ப்ரம்மத்தை யறிந்தவன் பிராமணன் எனப்படுவான்" என்றிருக்கிறது. அங்ஙனம் விலக்குகளும் "பிராமணன் கள்ளுண்ணல் கூடாது" என்பதாதியாய் சில பொதுவாயிருக்கின்றன, மற்றுப் "பிராமணர் அப்பரம்பொருளை வேதங்களால் அறிய விரும்புவார்" என்றும் பல விதிகளுமிருக்கின்றன. இவ்விடங்களில் எமக்குச் சமுசயந்தோன்றின் அவற்றுள் அறிவுள்ளவனே பிராமணனுயின் உபநயனஞ் செய்துகொண்டும், அந்தணர் கள்ளுண்பதுகுற்றமாகாதொழியும். மற்று வசந்தகாலத்தில் எ-வயதுள்ள பிராமணனுக்கு உபநயனம் என்பதாதி வசனங்களும் ஒவ்வாதொழியும். அவ்வாறு ஞானியே பிராமணனுயின் அவன் வேதங்களாற்றான் கடவுளை அறிய விரும்புவானென்னல் எவ்விதம் அமையும்? இங்ஙனம் பற்பல வாக்கியங்களை ஆரா

[illegible]

யந்தவிடம் இவர் கருத்து இதுவெனப் புலப்படுகின்றது. ஒரு பிராமணஜாதியிற் பிறந்த மனிதர் அச்சாதிப் பெண்ணைச் சம்ஸ்கரிக்கக் கர்ப்பாதானமுதலியவைகளைப் பெற்[று] அவரிடம் பிறந்தவனே ஜாதிப்பிராமணன் என்றும், அவன் பிறந்தமாத்திரையில் வேதங்களிற்கண்ட விலக்குகளுக்குள்ளாக்கிக் குடிமுதலியவற்றை ஒழிக்கவேண்டுமென்றும், வேதங்களில் மறுக்கப்பட்ட மற்றெவ்விதத் தொழிலையும் செய்யக்கூடாது. இனி இவன் பிறப்பொன்றாற் பிராமணனாதலால் இவர் வேதங்களிற் கூறப்பட்டநற்கிரியைகளையும் செய்யக்கூடாது. அவ்வைதிக கர்மங்களுக்கு வைதிக சம்ஸ்காரமே காரணம். அஃதின்றி அது அமையாது. அச்சடங்கே குழந்தைகள் வேதாதிகாரம் பெறுதற்காகப் பெரியோராற் செய்யப்படும் உபநயனம். அச்சம்ஸ்காரம் பெற்ற வந்தணர் கன்மங்களைச் செய்துகொண்டே ஆன்மவிசாரம் செய்யப்புகுவானேல் அவன் ஆரணங்களைக் கொண்டே அவற்றை அறிவானாக" என்பது கருத்து. இனி அந்தணர் முத்தி பெறுவார்" என்றும், "அந்தணரோ எல்லாக்கடவுளரும்" என்பதாதி

[illegible]

ஸ்தலங்களில் அந்தணர் என்பவர் அறிஞரோ. ஆயின் பிராமணன் என்பவன் சாதிகன்ம தவ வேறுபாட்டால் மூவகையாவான். பரசுராமன் முதலியோரிடத்துள்ள க்ஷத்திரியத்தன்மையும்கௌணமேயென்க. ஆதலாற்றான் வியாசாசாரியர் "பிறப்பானும், கன்மத்தானும், தவத்தானும், யோகத்தானும் இவர் பிராமணர்" என்று தௌமியரைப்பற்றி எழுதினர். வஜ்ரஸூசி உபநிடதம் அறிவையே புகழ்ந்தது. கன்மநூல்கள் கன்மப்பிராமணத் தன்மையைத்தானே புகழ்கின்றன. இம்மூவகையும் ஒரிடஞ்சேர்ந்தால் அது மிகவும் வியக்கத்தக்கதும் கௌரவிக்கத்தக்கதும். இவற்றுள் இனி ஒருவன் பிறப்பால் மட்டில் அந்தணனாகாது மற்றவையால் அத்தன்மையைப் பெறினும் அவனுக்கு ஞானம் முற்றுப் பெருமையின் அவன் கௌணப் பிராமணனே. இனிக் கன்மம ஞானங்கமென்பதைப்பற்றி முன்னர்க் கன்மத்தைப்பற்றி எழுதுமிடமே விரித்தோம். வேறிடம ஞானம் இருப்பினும் அதற்குக்காரணம் முற்பவ நல்வினையே. இனி அக்காரண கன்மம் ஏதோ ஞானத்தை அறைகுறையாய் உண்டாக்கி ஒழி

[illegible]

யும். ஆயின் அவ்விடத்திலும் பூர்ணஞானமுண்டாகக்கூடிய கன்மம் என்னுங் காரணமமையின் அது முக்கியமல்லவா? கன்மமும் விந்துவின் பரிபாகத்தை அவாவுமால் பற்றி ஜன்மம் அதற்கின்றியமையாது. ஆதலின் ஞானதிகாரியும் ஞான வீரியாதிகாரியும், ஞான வாணிபாதிகாரியும், ஞானசிற்பாதிகாரியும் நன்னிலையடைய இது ஓர் கருவியே. ஆயின் வருணம் என்பது முக்கியம் ஜாதி. மற்றது கன்மம்; மற்றது ஞானம். இவற்றுள் அறிவே மிகச்சிறந்தது. அதன்காரணத்தொடர் ஜன்மத்தில் முடிதலால் அது மிகவும் எவராலும் சூசிக்கத்தக்கது. ஆயின் ஜாதிமாத்திரையில் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என நால்வகுப்புண்டாயிற்று. இவர்களிலும் வேறானவர் அவைதிகர் என்றும், ஆரியராகார் என்றும் "தஸ்ஸ—" எனப்படுவார் என்றும் மனு கூறியிருக்கின்றார். "முகம் தோள் துடை கால் இவ்விடங்களிற் பிறந்தவரினும் வேறானவர், வடமொழி வழங்கினும் மற்றெம்மொழி வழங்கினும் அவர் தஸ்ஸ—வ" என்பதால் என்றறிக. அங்ஙனமே வேதத்திலும் "தஸ்ஸ—க்களைத்தொலைத்து

[illegible]

ஆரியவருணத்தை ரக்ஷித்தான்" என்றிருக்கின்றது. இங்கு "ஆரிய வருணம்" என்பது "தஸ்ஸ—" என்பதற்கு எதிர்மறையாய் நிற்றலால் தருமசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட நாலுவருணங்களையுமே குறிக்கின்றது. அவரின்றி மற்றவர் வேதங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் "தஸ்ஸ—" என்றும், புராணேதிகாசங்களில் "யவனர், மிலேச்சர்" என்பதாதி பல சொற்களாலும் வழங்கப்படுகிறார்கள். ஆயின் ஆரியத்துவம் வருண தர்மத்தாற் பிறந்தது. அவ்வரிய வாரியதருமங்கள் இருமைப்பயன்களையும் தருமென்பதை "அரிய ஆரியாசார ரகசியத்தில்" காணக்கூடும். இனி இத்தருமம் ஒழியின் ஆரியத்தன்மை ஒழியும் எனச்சொல்லவும் வேண்டுமோ? ஆரியத்தன்மையே அதுவாயின் அஃதில்லாவிடத்து அத்தன்மை இல்லையென்பது சொல்லாதமையும் என்றறிந்தொழுகாதார் எவ்வாரியருமிரார்.

இனி இப்பெருமுபந்நியாசத்தால் இக்காலத்தில் அனேகமாய்க் குறுகிவருதலைக்கண்டு அவைதிகர்க்குக கிடைக்காததும் வைதிகர்க்கு மகாபாக்கியமுமான இவ்விஷயத்தை அதன் பெருமையுடன் விளக்

[illegible]

[illegible]

"[illegible]"

[illegible]

க. [illegible]

கவும் யாம் முன்வந்து இவ்வளவு விவகரித்தோம்.

இவைகளை இழுக்கற்றவரும் வைதிகர் குலத்தவரும் வருணாபிமானிகளும் விதண்டாவாதம் செய்யாதவருமான நந்தேயத்துப்பண்டிதர் இதைக்கண்டு களித்து நம்மை ஆசீர்வதிப்பார் என எண்ணுகிறோம்.

ஐயன்மீர்!

இனி இதைக்கண்டு மேற்றிசையார் எழுதிவைத்த வெறும் எண்ணிக்கையும் விளைவிக்கும் துர்ப்போதனைகளுக்கிணங்காது ஆங்கிலேயபாடைபைக்கற்ற நம்மவரிடமும இவ்வுண்மையை எடுத்துரைத்து இருவருங்கூடிக் கூடியமட்டில் இந்நல்லொழுக்கத்தை இத்தேசத்திற்றானே நிலைபெறச் செய்வோமாஞல் யாம் பேரானந்தம் பெருஞப்பெறுவோம். ஆயின் இவ்விஷயங்களுள் உள்ள குறைகளையே நோக்காதீர்கள்! வெளியிடாதீர்கள்! சிந்தியாதீர்கள்! தியானிக்காதீர்கள்! மற்றுள்ள குணங்களையே கவனியுங்கள்! அவற்றையே வெளியிடுங்கள்! அவ்விஷயத்தையே நாடுங்கள்! பெரியோர் குணங்களையே உரைப்பாரென்பது

[illegible]

திண்ணம்! ஏதோ ஆசிரியன் உபதேசித்தபடி எமது சிற்றறிவிற் கெட்டியபடி அவ்வளவே இங்கு வெளியிட்டோம்.   சுபம்.

மறுமை.

தொடர்பு.

"இனி யாதனைகளில் ஏது பிராணிகள் ஒழியாதிருக்கின்றார்கள்" என் யாதனாசரீரத்தில் பிராணிகள் 'ஒழிவதில்லை' என்ற வினாவைப்பற்றி ஈண்டு விசாரிப்பாம். இதன் உட்கருத்து இது:—"உயிர்களுக்கு உடல் அடிக்கடிமாறுமாதலின் ஏன் அதிக துயரம் நேர்ந்தவிடம அச்சரீரத்தை உயிர்கள் விட்டொழிக்காது. மனிதனை வருத்தவேண்டியே ஒரு சரீரமா? அதுதான் எக்காரணங்களா லுண்டாகும்? அஃது நித்தமாயின் ஏன் அது போகத்தால் ஒழியுமென்கிறீர்? அவ்விதச் சரீரம் நரகவாசிகளுக்கே. மற்றவர்க்கு ஏன் இல்லை! சுவர்க்கதில் சரீரமின்றியா உயிர்கள் சுகம்பெறுகிறார்கள்?" என்பதாகி.

இவைகளுக்குமுறையே விடை:—

1. உயிர்களுக்கு உடல் அடிக்கடி மாறுவதுண்மையே. முற்பவக்கன்மங்களை யனுபவிக்கவுடனன்னெ

[illegible]

திகளைச் செய்பவுமே கடவுள் தனுகரணங்களைக்கொடுக்கிறார். இவ்விஷபம "கடவுள்" "கன்மம்" இவ்வுபந்யாசங்களில் எழுதப்பட்டன. இனி அவ்வவர் கன்மங்களுககிசைய தனுகரணங்களைக் கடவுளமைக்க அதைப்பெற்று இருவினைப்பயனை அனுபவித்தே அச்சரீரத்தைத் துலைக்கவேண்டும் என்பதுண்மை. இனி அவ்வளவு கொடியசரீரத்தை எதற்கெனச் சிருட்டிக்கின்றாரெனில் ஓர் நல்லரசர் சிறைகட்டி அதில் குற்றவாளிகளுக்குற்ற சாதனங்களைத் தேடிவைத்தால் கொடுங்கோலனுவானு? அது அவன் கடமையெனில் இது கடவுளது இயற்கைத் தொழிலே. ஆயின் "நன்மை தீமை இரண்டும் அவசியம் அனுபவித்தாலன்றி ஒழியாது" என்று பெரியோர் சொல்வர். பாருங்கள்! உலகத்தில் ஒருவன் தனக்குசிதமான் விருத்தி வேறு கிடையாவிடினும் இது அயோக்கியம் என்று ஒதுக்கித் தொலைக்கும் ஒரு விருத்தியை ஓர் அரசன் வம்சத்துப்பிள்ளை கையாளுவனேல் அவன் சரீரம் கல்லா? இல்லை மற்று மனப்பிடித்த வேலையில் அவன் செல்லுகிறான். அவனுக்கு உயிரோ பெரியது. முன்னுளு

[illegible]

க்கு மானமே பெரிது. இவ்வளவே வேற்றுமை. பெண்களிற்சிலர் கணவனிறந்தும் உதாசீனமாக இருக்கின்றாள். மற்றும் சிலர் உடனே உயிரையுந் துறக்கின்றார். இவ்விருவர்க்கும் மனமனுவே. ஆயினும் அவ்வவர் கன்மசேஷத்தால் அவர் பிழைப்பதும் அழிவதுமாதலின் அவ்வப்பயன் அனுபவிக்குமளவில் அதொழியாது.

முன்னர் நாம் "பலவண்டங்கலும் பல சரீரவேற்றுமை இருப்பதாய் எழுதியபடி ஒவ்வொன்றும் தன்னினத்தை இயக்குமாதலின், தேவர் சரீரம் அதிக சுகமும் மனுஷ சரீரம் சுக துக்கங்களுக்குட்பட்டதும் ஆவதுபோல் அதிக துயரம்பெற ஒரு நரகசரீரமிருக்க வேண்டியதே. அதன் உற்பத்தி விரிவாய் கருடபுராணத்திற் சொல்லப்பட்டது. இங்கு அதன் சுருக்கத்தினை விரித்துக்காட்டுவாம். மரணகாலத்திற் சிதறிய சூக்குமசரீராம் சங்கைப் பிள்ளை முதலியோர் செய்யுங் கிரியைகளால் மறுபடி சேர்த்தால் அதுவே பூர்த்திபெற்றுப் பாவம் பெருகியதாயின் நரகத்தாலியக்கப்படும். (இங்கு எடுத்துக்காட்டிய வரலாறு கருடபுராணத்தும்

[illegible]

மற்றும் சில வுபநிடதங்களிலும் மேற்றிசையார் மதக்கோட்பாடுகளுள்ளும் இருக்கின்றது. இவ்விஷயத்தில் ஆரியர் கருத்து யாதெனில் இச்சரீரத்தை வாசனை ஒழித்து அதனால் தேகம் முதலிய வத்துக்களைத் தானேவிட்டொழிபாது. விரத்தியின்மையால் சரீராபிமான மிகுதியுடன் இச்சரீரத்தை விடினும் அச்சீவனது அபிமான வலியால் அதுதான் என்னு மகந்தைக்கிடமான சரீரத்தையும் தனது என்னும் அபிமானத்துக்கிடமான பிள்ளைமுதலியவற்றையும் பற்றியே நிற்றலின் அவ்வசுபப்பிரோதாம்சமே பிரோதாசௌசம் எனப்படுமாதலினும் அதை ஒழித்து அவைகள் பலவிடங்களில் உள்ளனவாதலின் அதைச் சேர்த்து ஒன்றாக்குவதே உத்திரகன்மப்பயன்.) இங்குண்மை இது. வெகுகாலம் இச்சரீரத்தைத் தான் எனவும் பெண்டீர் முதலியவைகளைத் தனதெனவும் அபிமானித்த ஜீவன் சரீரத்தை விட்டகலுங்கால் உயிர்விட்டவிடத்தும் சுட்டவிடத்தும் மற்றுள்ள குண்டங்களிலும் சிறிது சிறிதாயிருப்பதால் அதைச்சேர்க்கு முபாயம் இதுவென நம்முன்னோர் கண்டார்கள். ஆதலாற்றான் துர்மரணங்

[illegible]

களில் அதிகமாய்ச் சிதறுமாதலின் அவற்றைச் சேர்ப்பதற்கு வெகு கடினமான கிரியைகளைச் செய்ய வேண்டும். அல்லது சிறிதுகாலங் கழிந்தால் அப்பொழுது இயற்கையாய்ச் சேருமாயின் அப்பொழுதே மேல் நடவடிக்கை நடத்தலாம். (அக்காலம் செய்த குரூர கிருத்தியத்தால் சரீரத்தை விடடுப்புறப்பட்ட புலன்களின் சூக்குமாங்கங்களும் மற்ற வந்தக்கரணங்களும் அக்காலம் சிதறினும் ஒன்றின்றி மற்றதெவ்வாற்றானும் பயன்படாமையினும் தன்னிடமமைந்ததைத் தன்னினமியக்கும் தன்மையானும் காலஞ்செல்லக் காற்று வழியும் சக்திவழியுமாய்ச்சேரும்.)

அவ்விதச் சரீரம் பிறகு எமனைத் தரிசிக்கும் யாதனை எனபபடும. பிறகு அக்கன்மப்பயன் ஒழியின் அச்சரீரம் ஒழியும். இனிச் சுவர்க்கம் பெறுவர் சரீரம் இன்பம் பயக்குமியல்பினது. அது யாகாதிக் கிரியைகளால் அமைபும் மீமாஞ்சையைக் கண்ணுற்றால் அச்சரீரம் உண்டாகும் வழிமுதலியவை வெளியாகும்.

(அங்கு குறிப்பது யாதெனில் ஒருவன் மனிதசரீரத்தை விட்டே [illegible]

[illegible]

த்துத் தேவசரீரத்தைப் பெறவேண்டி நவனீததீக்ஷைமுதல் ஆகாரத்தைத் தொலைத்து மலஜலமொடுக்கிப் பற்பல நல்ல கொடி செடிகளின் புகையை யுட்கொண்டு ஓ[illegible]த்தில் சேர்க்கும்பொருள்களால் சே[illegible]ர்க்கப்பட்ட அமிர்தத்தை உண்டாக்கின நல்லோஷதிகள் ஆவி சரீரத்தைச்சுற்றிநிற்கப்பெறுவான். அதே அபூர்வசரீரம். உயிர்இவ்வுடலைவிட்டால் உடனே அதிற் பற்றிநின்ற அவ்வபூர்வ சரீரத்திற்புகும் உடன் அவ்வபூர்வ சரீரம் சுவர்க்க வண்டத்தால் இயக்கப்படும் என்பது).

அச்சுவர்கங்களுள் எமது சரீரங்களைப் போன்ற சரீரங்கள் உண்டாவதில்லை. உலகத்தில் இடவேற்றுமையாற் பன்னிறங்களும் பல்லியர்கைகளும் உண்டாவது போல் இவர்களுள்ளும் வேற்றுமையுண்டு. உதாரணமாக நம்முன்னோர் பிரமசரியம் அற்பலாப[illegible]லுள் திருப்தி முதலிய நற்குணம்[illegible]றனர். இக்காலத்தோ அஃதெங்கோ ஒழிந்தது. ஆகையால் எக்காலவரையிற்கடவுளால் எச்சரீரம் எவ்வழி அளிக்கப்பெற்றதோ அதுவரையில் அது ஒழியாது. அவைகளைச் சொன்மாத்திரையில் நம்புவதெப்படி? என்பதைப்பற்றி விசா

[illegible]

ரிக்கப்புகுந்து எழுவகைப் பாதாளச் சொற்களும் இன்ன தாற்பரியத்தால் உண்டாயினவெனக் குறிப்பாம்.

வரும.

சம்ஸ்கிருதபாஷை.

ஜோதிஷம்.

தொடர்பு.

ஐயா!

யாம் இச்சோதிடத்தைப்பற்றி முன் எழுதிமுடித்ததில் பிரச்ன ஜாதகவிஷயங்களிலுள்ள சமுசபத்தை யகற்றுவதாய்ச் சொன்னோமல்லவா? அது விஷயத்தைப்பற்றி இங்கு சிறிது கூறுவாம். பாருங்கள்! உலகத்திலுள்ள எப்பொருள் சூரியனது வெப்பத்தானும் சந்திரன் ஒளியானும் மற்றுமுள்ள கிரகங்களின் கிரணங்களானும் விருத்தியடைகின்றது. அவ்விதமே இராக்காலங்களில் விசேஷமாய்ச் சந்திரன் கிரணங்கள் பூமியிற்படாது மேகங்களால் மறைக்கப்பட்டால் அனேகவித பூச்சிகள் கடலைமுதலிய பயிர்களில் விழுந்து அவைகளைச் சிதைக்கின்றன. இங்ஙனம் சூரியகிரணம் படாதொழிந்தால் அனேக பயிர்கள் விருத்தியா

[illegible] Africans [illegible] Lapland [illegible]

காதொழிகின்றன. ஆயின் சரீரங்களும் இவ்விதமே உற்பத்திமுதல் பல கிரகங்களின் கிரணங்களாற் பல வேறுபாடுகளைப்பெருகின்றன. பாருங்கள்! அதிகச் சூடுள்ளதாய் சூரியகிரணங்களை நேரில் வாங்குந் தன்மையரான நீக்கிரோசாதியார் சரீரமும் நமது தேசவாசிகள் சரீரமும் லாபலாந்த தேசத்தார் சரீரமும் எவ்வளவு வேற்றுமை பெற்றது. (இவ்விஷயத்தைப்பற்றி யாம் முன்னமே மறுபிறப்பைப்பற்றி எழுதியவிடமும் விஸ்தாரமாய் எழுதினோம். ஆயினுஞ் சிறிது இங்கு எடுத்தோதவேண்டியதுண்டு. அவ்வேற்றுமைகள் தேசத்தால் சரீரத்தில் அமைவதுண்டு. ஆப்பிரிக்கா தேசத்தின் தென்முனைக்கருகில் கோரைப் பல்லுகளும் கறுத்தும் பருத்தும் உள்ள சரீரங்களும் உண்டாகின்றன. ஈரோப்புதேசத்தைச் சேர்ந்த ருஷியா வடபாகத்திலுள்ள மூன்றடி சுமாரில் சர்வாவயமும் பொருந்தியவரும் அதற்கியைய மிக அழகியசரீரிகளுமாகின்றனா.)

அங்ஙனம் ஒரே சூரியன் கார்ப்பருவத்தில் நமக்கு எவ்வளவு குணத்தைக்கொடுப்பான். முன்பனிப்பருவத்தில் எவ்வளவு சுகம்

[illegible]

ளிப்பான். இளவேனிற்பருவத்தில் எவ்வளவு குணங்களை யளிப்பான். உண்மையை நோக்கினால் ஒவ்வோர் பருவத்தில் ஒவ்வோர் தேசத்தவர்க்கும் ஒவ்வோர் தொழிலாளிகளுக்கும் ஒவ்வோர் பருவத்தினர்க்கும் வெவ்வேறு பயனே. பாருங்கள்! ஒரே கார்ப்பருவத்துள்ள சூரியகிரணம் அனேக பயிர்களை விருத்திசெய்கிறது. எருக்கு முதலியவைகளைப் பழுத்தொழியச்செய்கிறது. அங்ஙனமே ஒரு சூரியகிரணமே ஒவ்வொரு மனிதர்க்கும் வெவ்வேறு பயனளிக்கும். நிற்க. ஒவ்வொருதினத்திலும் ஒவ்வொரு முறைகிரகங்கள்எல்லாவற்றின்நிழல்களையும் ஒரு ஜீவன் தன்மேற்படப் பெற்றுவருகிறான். அது முறையே ஒவ்வொரு குணங்களைக் கொடுத்துவருகின்றது. அவ்விஷயத்தை உற்றுநோக்கில் இவ்விதம் ஏற்படுகின்றது. ஆகாய விரிவைப் பன்னிரண்டு பாகங்கொண்ட ஒரு சக்கிரமாக்கி அதில் ஒவ்வொன்றிலும் ஒன்பதுபாகம் செய்து அவற்றில் நாலுபாகங்கொண்டது நக்ஷத்திரமெனவும் அவைகள் 2¼ சேர்ந்தால் ராசியெனவும் பெயரிட்டு அவற்றுள் சூரியன் முதலிய கிரகங்கள் எந்த ராசியிலாவது ஒன்றி

[illegible]

ற்றுனே தோன்றவேண்டுவதின்றி யமையாமையின் அவைகளில் கிரகங்கள் ஒன்பதையும் சேர்த்து 12 ராசிகளுள் ஒன்பது கிரகங்கள் எவ்வளவு வேறுபாடு பெறுமோ அவ்வளவையும் எடுத்துச்சேர்த்து அவற்றுள் மனிதன்உண்டாகக்கூடாத (அதாவது மனிதர் கர்ப்பகோசமலரக்கூடாத கிரககிரணங்களமைந்த)சிலசூக்ஷ்மகால நிலைகளைஒதுக்கி மிகுந்ததை ஓர்வழிச் சேர்த்து ஒவ்வோர் கிரகத்தை முன்னிலையாய்க்கொண்டே ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லும் புஸ்தகம் நாடீ புஸ்தகம் எனப்படும். அவற்றுள் சுக்கிரநாடீ முதலியவை முக்கியமானவை என்பார் சிலர். அவற்றுள் உலகத்தில் மனிதனெனப்பிறப்பவன் எவ்வித ஜாதகபாவங்களையும் எவ்வளவு சுகதுக்கங்களையும் பெறுவானோ அவ்வளவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதல்கொண்டே இவ்வுண்மையை யறிந்தவர் ஆரியரோயாதலின் இச்சோதிடப்பெருநூல் இத்தேசத்தேயன்றி மற்றவர்க்கெவ்விதமும் சம்பந்தமற்றது.

வரும்.

ஓம்.

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்.

புத்-5] சிதம்பரம்: 1890ஞு நவம்பர்மீ 1உ [இ2

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்க்ருதபாஷா.

[illegible]

ஸம்ஸ்கிருதபாஷை.

ஜோதிஷம்.

தொடர்பு.

இச்சரீர வியந்திரம் எச்சமயம் வேலைக்குத்தொடங்குகின்றதோ அது முதல் ஒரு ஏற்பாட்டின்கீழ் நடந்துவருவதேயன்றி அமைப்பில்லாது வால்நக்ஷத்திர வழியாய்ப் போவதில்லை. ஆயின் அவைகள் பலவழி